DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT,
(MAGISTRATE LEVEL), HOSUR.

S.T.C.No.216/2017-PW2

பெயர் : வி.அருண் தொழில்: மேலாளர்

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873, on the 8th day of November 2019.

நான் கரூர் வைஸ்யா வங்கி, பத்தலப்பள்ளியில் மேலாளக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சன் பைப்ஸ் நிறுவனத்தின் வங்கிக்கணக்கு 1.7.2017 முதல் 4.11.2019 வரையிலான வங்கிக்கணக்கு விவரத்தை எடுத்து வரச்சொல்லி அழைப்பாணை வந்துள்ளது. அததைன நான் எடுத்து வந்துள்ளேன் அது பு.சா.ஆ.6 ஆகும். சன் பைப்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் பெயர் செந்தில்குமார் என்பவர் ஆவார். 25.7.2017ல் திவான் பைனான்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து ரூ.34,50,000/- பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27.7.2017ல் ரூ.14 இலட்சம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கிக்கணக்கு நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். பல இலட்சங்கள் பரிமாற்றம் நடந்துள்ளது என்றால் சரிதான்.

கு.வி,

நான் தாக்கல் செய்துள்ள வங்கிக்கணக்கு விவரத்தில் சன் பைப்ஸ் நிறுவனத்திற்கு உரிமையாளர் செந்தில்குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இதில் இல்லை, வங்கியிலுள்ள மற்ற மின்சாதனப்பொருட்களைப் பார்த்தால் தெரியும். 12.7.2017 மற்றும் 13.7.2017ல் ரூ.2 இலட்சம் மற்றும் ரூ.3,30,000/ -பணம் செலுத்தப்பட்டு, 13.7.2017ல் டி.டி. மூலம் ரூ.5,85,910/- பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகைகள் தவிர்த்து இந்தக் கணக்கில் கடனாக வரப்பெற்ற தொகையைத் தவிர ரூ.3 இலட்சத்திற்கு மேல் எந்தத் தொகையும் செலுத்தப்படவில்லை என்றால் 22.11.2017ல் வேறொரு வங்கிக்கணக்கிலிருந்து ரூ.6 இலட்சம் இந்த வங்கிக்கணக்கிற்கு பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 1.8.2018 மற்றும் 9.8.2018 ஆகிய தேதிகளில் திவான் ஒசூர் பைனான்ஸ் நிறுவனத்திற்கு புகார்தாரர் செலுத்திய காசோலை

திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.2.2019ல் திவான் ஒசூர் பைனான்ஸ் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட இரண்டு காசோலைகள் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

/ஒம்/சா.முனுசாமி,
குற்றவியல் நீதிபதி,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.